விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டத்தைத் துரிதப்படுத்தல் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3698 ஆம் 3699 எஸ்ஆர்ஐ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய உயர் கல்வி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சும் தற்போதைய உயர் கல்வி மற்றும் கல்வி அமைச்சும் நிறைவேற்று முகவராவதுடன் களனி, இலங்கை ரஜரட்ட, இலங்கை சபரகமுவ மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்கள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவரகங்களாகும். உயர் கல்வியின் வேலைவாய்ப்பு சார்ந்த தொழில்நுட்பப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான அணுகல் வசதிகளை மேம்படுத்துவதே இச் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்ட நடவடிக்கைகள் 05 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. குறிப்பாக (அ) ஆக்கபூர்வமான தொழிநுட்பக் கற்கை மற்றும் ஆராய்ச்சி சூழலை நிறுவுதல் (ஆ) தரமான உயர் தொழில்நுட்ப கல்வித் திட்டத்தைச் செயற்படுத்துதல் (இ) கைத்தொழில் மற்றும் சர்வதேச ஆராய்ச்சி இணைப்புகளை உறுதிப்படுத்துதல் (ஈ) பீட முகாமைத்துவத்தின் இயலளவு மற்றும் (உ) புதிய செயற்திட்ட விருத்தி வசதியை உறுதிப்படுத்துதல். கடன் உடன்படிக்கைகளின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 30,051.45 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியனானதுடன் இதில் ரூபா 26,408.45 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 145 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் உடன்பட்டிருந்ததுடன் ரூபா 3,543 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஏப்ரல் 17 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி பூர்த்தியாக்கப்பட வேண்டுமென திட்டமிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இணைந்த நிதிக்கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தோகை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா (மில்) | | | |
| (i) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பீஎம்யூ இன் அட்டுறு செலவினத்திற்காக ரூபா 215,258 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியான செலவினம் ரூபா 16,194,460 தொகையாகக் காணப்பட்டது. ஆகவே, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவின் செலவினம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 15.98 | மிகைப்பபடுத்தப்பட்டுக் காண்பிக்கப்பட்டமை (அட்டுறு) | 2018 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு செலவினம் ரூபா 16,194,460 ஆகக் காணப்பட்டது. இதில் ரூபா 215,258 அட்டுறு செலவினமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மூலதனமாக்கப்பட வேண்டிய மொத்த செயற்பாட்டுக் கிரயம் 2018 ஆம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. இது 2019 நிதிக் கூற்றுக்களில் சீராக்கமாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் இறுதியில் உள்ளபடியான செலவினம் நிதிக் கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். |
| | வெளி வளத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அறிக்கையில் காண்பிக்கப்பட்ட 2019 திவெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட தொகை ரூபா 663.9 மில்லியன் மத்திய | 22.11 | இணக்கம் செய்யப்படாத மீதி | கடன் செயற்திறனிற்கு முன்னர் முன்கூட்டியே நிதியளிப்பதன் அடிப்படையில் இச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது. கடன் ஒப்பந்தம் கைத்திடப்பட்டமை மற்றும் கடன் | தொகைகள் இணக்கம் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் துல்லியமாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வங்கிக் கூற்றுக்களில் வழங்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்ட தொகையான ரூபா 641.8 மில்லியனுடன் இணங்கியிருக்கவில்லை. | | செயற்திறனின் முன்கூட்டிய நிதியளிப்பில் ஏற்கப்பட்ட செலவினம் ( ரூபா 21.2 மில்லியன் ) ஆசிய அபிவிருத்தி வங்கியால் நேரடியாக திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு நேரடியாக மீளளிக்கப்பட்டிருந்தது. இப் பரிவர்த்தனையாலும் மத்திய வங்கியின் ஈடுபாடின்றி கடன் கணக்கில் இருந்து வழங்கப்பட்ட மூலதனக் கடன் வட்டி நேரடியாகச் செலுத்தப்பட்டமையாலும் மத்திய வங்கி அறிக்கைகளில் தென்படவில்லை. மேலும் வெளி வளத்திணைக்களமும் மத்திய வங்கியும் இரண்டு வெவ்வேறு பரிமாற்று விகிதங்களைப் பயன்படுத்தியிருந்தன. மத்திய வங்கியின் ஈஆர்டீ – டீஆர்எம்எஸ் உடனான இணக்கக் கூற்று இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளது. |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட நடவடிக்கைகள் 05 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. குறிப்பாக

(அ) ஆக்கபூர்வமான தொழிநுட்பக் கற்கை மற்றும் கைத்தொழில் சார்ந்த கல்வி மற்றும் ஆராய்ச்சி வசதிகள்

(ஆ) தரமான பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும் சர்வதேச தரங்களுடனும் கைத்தொழில் கேள்வியுடன் இணைந்த கல்விசார் பதவியணிக்கு உதவுதல்

(இ) போட்டித் கைத்தொழில் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்த திட்டம்

(ஈ) இயலளவு விருத்திச் சந்தர்ப்பங்கள்

(உ) 2021 ஆம் ஆண்டிற்கான அங்கீகாரத்திற்காக முன்மொழியப்பட்ட புதிய உயர் கல்வி செயற்திட்டத் தயாரிப்பிற்கு அரசாங்கத்திற்கு உதவுதல்.

| | கூறு | நடவடிக்கைகள் | ஆரம்பிக்கப்பட திட்டமிடப்பட்ட காலப்பகுதி | ஆரம்பிக்கப்பட்ட திகதி | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | --------- | ---------- | ------------ | ----------- | --------- | ------------------- | ---------------- |
| (i) | ஆக்கபூர்வமான தொழிநுட்பக் கற்கை மற்றும் ஆராய்ச்சி சூழலை ஸ்தாபித்தல் | வடிவமைத்துக் கட்டுதல் அடிப்படையில் 04 பல்கலைக்கழகங்களுக்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான ஏல ஆவணங்களைத் தயாரித்தல் | 2018 ஆம் ஆண்டிற்குள் | 2019 | செயற்திட்டக் காலப்பகுதிக்குள் நிர்மாணிப்பு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய இயலாததுடன் கிரயம் அதிகரிப்பதற்கான இயலுமை உள்ளது. | ஆஅவ யிடம் வடிவமைத்து நிர்மாணித்தல் நிர்மாணிப்பிற்கான முறையான தரத்திலான ஏல ஆவணங்கள் இன்மையாலும் இது ஆஅவ க்கு ஒரு புதிய விடயம் என்பதனாலும் தரமான ஏல ஆவணங்களைத் தயாரிப்பதற்கு கணிசமான அளவு காலம் செலவிடப்பட்டது. **தற்போதைய நிலை** சகல சிவில் பணிகளுக்காகவும் ஏலங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. களனிக் நிர்மாணிப்பின் கட்டுமான வழங்களுக்கான பரிந்துரை அமைச்சரவை அமைச்சுக்களின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தொழிநுட்ப மதிப்பீடு பூர்த்தியடைந்துள்ளதுடன் ஏஸ்சீஏபீசீ அங்கீகாரத்திற்காக சபரகமுவைப் பல்கலைக்கழகத்தாலும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினாலும் | தாமதமானவற்றை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மேலதிக கிரயத்தைத் தவிர்ப்பதற்கு ஒப்பந்த வேலைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ள வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ரஜரட்டை பல்கலைக்கழத்தின் நிர்மாணிப்பிற்காக தொழிநுட்ப மதிப்பீடு நடைமுறையில் உள்ளது. சகல நான்கு சிவில் பணி ஒப்பந்தங்களையும் இவ் ஆண்டின் 2020 ஆம் ஆண்டிற்குள் வழங்கி செயற்திட்டக் காலப்பகுதிக்குள் நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (ii) | ஆக்கபூர்வமான தொழிநுட்பக் கற்கை மற்றும் ஆராய்ச்சி சூழலை ஸ்தாபித்தல் | களனி, ரஜரட்டை, ஸ்ரீ ஜயவர்தனபுர மற்றும் சபரகமுவைப் பல்கலைக்கழகங்களின் அங்கீகரிக்கப்பட்ட விபரான வடிவமைப்பு, பூரணமான நிர்மாணிப்புத் திட்டங்கள். சிவில் வேலைகள் ஆரம்பிக்கப்படல் | 2019 இன் 4 ஆம் காலாண்டு | இதுவரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டக் காலப்பகுதிக்குள் நிர்மாணிப்பு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய இயலாததுடன் கிரயம் அதிகரிப்பதற்கான இயலுமை உள்ளது. | தேவையான அங்கீகாரத்தைப் பெற்று சிவில் பணிக்கான நிர்மாணிப்புத் திட்டங்களைப் பூர்த்திசெய்வது ஒப்பந்த வடிவமைப்பு மற்றும் கட்டிட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும். ஏலத்தின் கட்டத்தின் போது எதிர்கால ஏலதாரர்கள் விரிவான வடிவமைப்புப் பகுதியை குறித்த கால எல்லைக்குள் பூர்த்தி செய்வதற்கும், முழுமையான கட்டுமானத்தை நிறைவேற்றுவதற்கும் ஒப்புக்கொண்டனர். | தாமதமானவற்றை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மேலதிக கிரயத்தைத் தவிர்ப்பதற்கு ஒப்பந்த வேலைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ள வேண்டும். |
| (iii) | தரம் மற்றும் கைத்தொழில் அமுலாக்கம் - | புதிய பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக பெண் பங்கேற்பாளர் | 2018 ஆம் ஆண்டிற்குள் | ஆண்டு 2020 | குறித்த தரப்பினரால் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெறப்பட | பாடத்திட்டங்கள் மற்றும் பாடவிதானங்களின் விபரம் பல்வேறு தரங்களில் கைத்தொழில் | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கி நடக்க |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | உரிய உயர் தொழில்நுட்ப கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் | கள் உட்பட கைத்தொழில் அரசியலமைப்புகளை நடாத்தல் | | | முடியாது போகும். | ஆலோசனைகள் இடம்பெற்றுள்ளன. 2020 பெப்ரவரி மாதம் பாலின நிபுணர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளார். வேலை வாய்ப்பு சார்ந்த புதிய பட்டப் படிப்புத் திட்டங்களுக்குப் பெண்கள் பங்கேற்பு உள்ளிட்ட கைத்தொழில் ஆலோசனைகளை மேற்கொள்ள வேண்டும். | வேண்டும். |
| (iv) | உறுதிப்படுத்தல் பீட முகாமைத்துவ இயலளவு | நான்கு பல்கலைக்கழகங்களில் பெண்களுக்கான சிறப்பு திட்டங்கள் உட்பட<br><br>தொழில்சார் வழிகாட்டலுக்கான மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டலுக்கான செயற்பாடுகளை விருத்தி செய்யும் கைநூலை உருவாக்குதல் | காலாண்டு 2, 2019 | இதுவரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | குறித்த வசதிகள் மாணவர்களுக்கு கட்டப்படமாட்டாது | பாலின நிபுணர் 2020 பெப்ரவரி மாதமே ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். பாலின நிபுணருடன் பெண்களுக்கான ஓர் விசேட நிகழ்ச்சித்திட்டத்துடன் ஓர் செயற்பாட்டுக் கைநூலைத் தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமான நடவடிக்கைகள் மேலும் தாமதிக்கப்படாது துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (v) | புதிய உயர் கல்வி செயற்திட்டத் தயாரிப்பிற்கான உதவி | உயர் கல்வி அல்லது புத்தாக்கத்திற்கான பாலினம் தொடர்பான கருத்துத் தாளைத் தயாரித்தல் | காலாண்டு 1, 2019 | ஆரம்பிக்கப்படவில்லை | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் செயற்திட்டக் காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் வெளியீடு 5 புதிய உயர் கல்விச் செயற்திட்ட விருத்திக்கு உதவுகின்றது. புதிய செயற்திட்டத்திற்கான வழிகாட்டல் பல்வேறு மன்றுகளில் விரிவாக கலந்துரையாடப்பட்ட | தாமதமான நடவடிக்கைகள் மேலும் தாமதிக்காது துரிதப்படுத்தல் வேண்டும். |

து. ஆரசாங்க செழிப்பு மற்றும் சிறப்பின் தேசிய கொள்கைக் கட்டமைப்பின் கீழ் புதிய உயர் கல்வித் திட்டங்களை அடையாளம் காண்பதற்கு அமைச்சிற்கும் ஆஅவ இக்கும் இடையே ஏற்கனவே இரு தரப்பு விவாதங்கள் நடந்துள்ளன.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ---------------------------------- | ---------- | -------------------------- | -------------------- |
| செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் படி, களனி, இரஜரட்ட மற்றும் சபரகமுவ மற்றும் ஶ்ரீ ஜயவர்தனபுர சிவில் வேலைகள் 2019 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். கிடைக்கப்பெற்ற தகவலின் படி, மேற்குறித்த சிவில் வேலைகளுக்கு ஏற்ற ஒப்பந்தக்காரர்களின் தேர்வு நடைமுறைகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதமாகி செலவிடப்படாத மீதிகளுக்காக உறுதிப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். | அனைத்து சிவில் பணிகளுக்கான ஏலமும் மூடப்பட்டுள்ளது. களனி கட்டுமானத்திற்கான ஒப்பந்த வழங்கலுக்கான பரிந்துரை அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சபரகமுவை மற்றும் ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்களுக்கான எஸ்சீஏபீசீ ஒப்புதலுக்காக தொழிட்ப மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இரஜரட்டை பல்கலைக்கழக நிர்மாணிப்புகளுக்காக தொழிட்ப மதிப்பீடு நடைமுறையில் உள்ளது. 2020 ஆம் ஆண்டிற்குள் சகல நான்கு ஒப்பந்தங்களும் வழங்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. | தாமதங்களைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மேலதிக கிரயங்களைத் தவிர்ப்பதற்காக உரிய நேரத்தில் ஒப்பந்த வேலைகளைப் பூர்த்தி செய்வதனை உறுதிப்படுத்த வேண்டும். |

### 3.3 கள ஆய்வின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள்

| இல. | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | **களனிப் பல்கலைக்கழகம்**<br><br>களனிப் பல்கலைக்கழகம் 2019 ஆகஸ்ட் 26 ஆம் திகதி அன்று மூன்று இரசாயன வழங்குனர்களுடன் ரூபா 306,666 பெறமதியான 33 இரசாயன வகையிலான பொருட்களை கணனி மற்றும் தொழிநட்பவியல் பீடத்தின் இரசாயன ஆய்வுகூடத்திற்கு வழங்குவதற்காக உடன்படிக்கைகளை மேற்கொண்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் 3.2.1 பொது நிபந்தனையின் பிரகாரம், இரசாயனப் பொருட்கள் செயற்திட்ட அமுலாக்கல் பிரிவிற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு எட்டு வாரங்களுக்குள் கையளிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், குறித்த பொருட்கள் 2020 பெப்ரவரி 25 ஆம் திகதிய கணக்காய்வுத் திகதியன்றும் செயற்திட்ட அமுலாக்கல் பிரிவில் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | நலிவான ஒப்பந்த நிர்வாகத்தின் காரணமாக இழப்புகள் ஏற்படக் கூடும். | **எஸ்ரீஎச்ஆர்டீ/கேஈ - ஈ20**<br><br>இவ் ஒப்பந்தம் மூன்று ஏலதாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் இரண்டு கம்பனிகள் உடன்டிக்கைத் திகதியில் இருந்து எட்டு வாரங்களுக்குள் பொருட்களை வழங்கியிருந்தன.<br><br>1. அனலிடிகல் இன்ஸ்ருமன்ட் (பிரைவேட்) விமிடட் 22.10.2019 ஆம் திகதிக்கு முன்னரே வழங்கியிருந்தன.<br><br>2. ஹெம்சன்ஸ் இன்டர்னஷனல் (பிரைவேட்) விமிடட் 04.10.2019 ஆம் திகதிக்கு முன்னரே வழங்கியிருந்தன.<br><br>3. எவோன் பார்மோ கெம் (பிரைவேட்) விமிடட் எட்டு வாரங்களுக்குள் பொருட்களை விநியோகித்திராத போதிலும் இது வரையில் விநியோகித்திருந்தன. | ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க ஒப்பந்தக்காரர்களை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் படி, கணனி மற்றும் தொழிநட்பவியல் பீடத்தின் பௌதீகவியல் ஆய்வுகூடத்திற்கு ஆய்வுகூட | உத்தேசிக்கப்பட்ட நலன்கள் பட்டதாரி மாணவர்களைச் சென்றடையமாட்டாது. | **எஸ்ரீஎச்ஆர்டீ/கேஈ - ஈ3**<br><br>இச் செயற்பாட்டில் 82 எண்ணிக்கையிலான விடயங்கள் | ஒப்பந்தங்களை வழங்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | உபகரணங்களைக் கொள்முதல் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் ஆரம்பிக்க வேண்டும். எவ்வாறெனினும், 2019 ஆம் ஆண்டின் போதேயே கொள்முதல் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | | உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மாதிரிகள் மிகவும் சிக்கலானதுடன் இவற்றிற்கு போதிய தொழிட்ப வல்லுனர்கள் இத்துறையில் இல்லாத காரணத்தினால் விரிவுரையாளர்களின் பங்களிப்பு அவர்களது நெருக்கமான கற்பித்தல் நடடிக்கைகளினின்றும் தேவைப்படுகின்றது. ஆகவே, கொள்முதல் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் ஏல ஆவணங்கள் தயாரித்தலை பீஜயூ வினால் பூர்த்திசெய்ய முடியாதிருந்தது. கொள்முதல் திட்டம் இதன் படி மாற்றியமைக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | 2019 திசெம்பர் 02 ஆம் திகதி கணனி மற்றும் தொழிநட்பவியல் பீடத்தின் இரசாயன ஆய்வுகூடத்திற்கு ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்முதல் செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு துணை தொழில்நுட்பவியல் மற்றும் மதிப்பீட்டுக் குழுவினால் ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.எவ்வாறெனினும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணக்கப்பாடு கிடைக்கப்பெறு முன்னர் 1487 எண்ணிக்கையிலான ரூபா 3.52 மில்லியன் பெறுமதியான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டிராததுடன் செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவிற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை . | கொள்முதல் மீதான நலிவான கட்டுப்பாடுகள் | **எஸ்ரீஎச்ஆர்டீ/கேஈ - ஈ 4**<br><br>11.10.2019 அன்று ஆஅவ இன் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்றதை அடுத்து 16.10.2019 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>ஓப்பந்தம் வழங்கப்பட்ட ஆவணங்களை ஆராய்கையில் அவான் பார்மோ கெம் (பிரைவேட்) லிமிடட் மற்றும் ஹெம்சன்ஸ் இன்டர்னஷனல் (பிரைவேட்) விமிடட் ஆகியவற்றின் கூட்டுத்தொகை விலை நிரலில் கூட்டல் பிழை இருந்தமை அவதானிக்கப்பட்டது. அத் தவறைச் | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டில் குறிப்பிடப்பட்டவாறு கடைப்பிடித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சீராக்குவதற்கு ஓர் துணை ஒப்புதலுக்காக ஆஅவ க்கு சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான ஒப்புதலும் வழங்கப்பட்டிரந்தது. எந்த ஒரு ஏலதாரருக்கும் தனிப்பட்ட பொருட்களை வழங்குவதற்கு துணை ஒப்புதல் எவ்வகையிலும் எந்த விளைவையும் ஏற்படுத்தமாட்டாது. ஆகவே, துணை ஒப்புதல் அறிக்கை தயாரிக்கையில் சில பொருட்களை அனலிடிகல் இன்ஸ்ருமன்ட் (பிரைவேட்) விமிடட் மற்றும் அவோன் பார்மோ கெம் (பிரைவேட்) விமிடட வழங்கியிருந்தன. இதன் படி, செயற்திட்ட அமுலாக்கல் பிரிவினால் பொருட்கள் பெறப்பட்டிருந்தன. | |
| (iv) | கணனி மற்றும் தொழிநட்பவியல் பீடத்திற்கு மூன்று மின்கருவிகளை (யூபீஎஸ்) கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,047,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் படி, குறித்த பொருட்கள் உடன்படிக்கைத் திகதியில் இருந்து 7 நாட்களுக்குள் விநியோகிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், இப் பொருட்கள் 2020 பெப்ரவரி 25 ஆம் திகதிய கணக்காய்வுத் திகதியன்றும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தக்காரர்களுக்கு அபரிமிதமான உதவிகள் வழங்கப்படலாம் | **எஸ்ரீஎச்ஆர்டி/கேஈ - ஈ 6** உடன்டிக்கைத் திகதியில் இருந்து எட்டு வாரங்களுக்குள் இப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும். 15.11.2019 ஆம் திகதிய மற்றும் 27.01.2020 ஆம் திகதிய கடிதங்களின் மூலம் வழங்குனருக்கு விநியோக நடைமுறையைத் துரிதப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எவ்வாறெனினும், வழங்குனர் 11.02.2020 ஆம் திகதியே பொருட்களை | ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க ஒப்பந்தக்காரர்களை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வழங்கியிருந்தார். | |
| (v) | கிடைக்கப்பெற்ற தகவலின் படி, கணனி மற்றும் தொழிநட்பவியல் பீடத்திற்கான ஆய்வுகூட தளபாடங்களின் வழங்கல், விநியோகம், ஸ்தாபிப்பு மற்றும் செயற்படுத்தலுக்கான ஒப்பந்தம் 2018 யூன் 30 ஆம் திகதி ரூபா 39.99 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் ஓர் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டு 2019 ஏப்ரல் 04 திகதி அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறெனினும், குறித்த வேலைகள் 2020 பெப்ரவரி 25 ஆம் திகதிய கணக்காய்வுத் திகதியன்றும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | வுழங்குனரின் நலிவான செயற்பாட்டின் காரணமாக பட்டதாரி மாணவர்கள் பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆய்வுகூடங்களை 02 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்த முடியாதுள்ளனர். | **எஸ்ரீஎச்ஆர்டீ/கேஈ - எப் 1** வுழுங்குனரின் நலிவான செயற்பாட்டின் காரணமாக ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு கொள்முதல் குழு தீர்மானித்து செயற்பாட்டு பிணைத்தொகையைப் பறிமுதல் செய்திருந்தது. தாமதத்திற்கான தண்டப்பணத்தைக் கழித்துக்கொண்டு விநியோகிக்கப்பட்ட தளபாடங்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்படும் பணிகளில் கண்காணிப்பும் மேற்பார்வையும் செலுத்தப்படும் வகையில் போதிய ஆக்கபூர்வமான ஒப்பந்த முகாமைத்துவ முறைமை அமுலாக்கப்பட வேண்டும். |
| | **<u>சபரகமுவ பல்கலைக்கழகம்</u>** | | | |
| (i) | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனையின் படி, கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் 28 நாட்களுக்குள் பீடத்திற்கு விநியோகிக்கப்பட வேண்டும். ஏவ்வாறெனினும், குறித்த தினத்தில் 51 விடயங்கள் விநியோகிக்கப்படாதிருந்தன. | ஓப்பந்ததாரர்களுக்கு தேவையற்ற உதவி வழங்கப்பட்டிருந்தது. | வுழங்குனர்களின் பல்வேறு காரணங்களால் வழங்கலில் தாமதம் ஏற்பட்டிருந்தது. கொடுப்பனவு நிலையில் கொள்முதல் வழிகாட்டல்கள் கடுமையாகப் பின்பற்றப்பட்டு தாமதத்திற்கான தண்டப்பணம் பீஐயூ இனால் கழிக்கப்பட்டுள்ளது. | ஓப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க ஒப்பந்தக்காரர்களை அறிவுறுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| இல. | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | -------------------- | --------- | -------------------- | -------------------- |
| (i) | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டில் குறிப்பிடப்பட்ட நிதி இலக்குகளின் படி, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு யூஎஸ் | இலங்கை அரசு ரூபா 11.51 மில்லியன் தொகையை செலவிடப்படாத மீதி மீது உறுதிப்பாட்டுக் கட்டணமாகச் | செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் திருத்த செலவீட்டுத் திட்டத்தின் படி, 2019 ஆம் ஆண்டிற்கான நிதி | தாமதமான நடவடிக்கைகள் மேலும் தாமதிக்கப்படாது துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | டொலர் 31.9 மில்லியனிற்குச் சமனான ரூபா 4,976 மில்லியன் செலவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஏவ்வாறெனினும், குறிப்பிடப்பட்ட இலக்கின் யூஎஸ் டொலர் 0.93 மில்லியனிற்குச் சமனான ரூபா 145 மில்லியன் அல்லது 3 சதவீதம் மாத்திரமே 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எய்தப்பட்டிருந்தது. | செலுத்தியிருந்தது. | இலக்கு யூஎஸ் டொலர் 3.8 மில்லியனிற்குச் சமனான ரூபா 684 மில்லியன் (யூஎஸ்டீ 180 எல்கேஆர்). 2020 ஆம் ஆண்டிற்காக எதிர்பார்க்கப்படும் இலக்கை அடைந்து செயற்திட்ட முகாமைத்துவ உசாவுகை உட்பட சகல சிவில் பணிகளையும் வழங்குவதற்கான நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | மீளாய்வாண்டின் ரூபா 2,199.2 மில்லியன் தொகையான மொத்த மதிப்பீட்டில் 5 சதவீதத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ரூபா 108.7 மில்லியன் தொகையை மாத்திரம் செயற்திட்டம் பயன்படுத்தியிருந்தது. | இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு மற்றும் கடன் தொகை ஒதுக்கீட்டில் குறை பயன்பாடு நிலவியது | 2019 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மொத்த ஒதுக்கீட்டுத் தொகை ரூபா 446.5 மில்லியன் ஆகும். சேயற்திட்டம் ரூபா 184.5 மில்லியன் தொகையை மாத்திரம் நடைமுறை நிதியாண்டின் போது பயன்படுத்தியிருந்தது. | தாமதமான நடவடிக்கைகள் மேலும் தாமதிக்கப்படாது துரிதப்படுத்தப்பட வேண்டும். |

**3.5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

| இல. | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | விநியோகத்தை அடுத்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களைப் பதிவுசெய்வதற்கு சபரகமுவ பல்கலைக்கழக செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவிற்கு முறையான நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவால் பதிவு செய்யப்பட்டு ஆராயப்படாமல் பொருட்கள் பீடத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கொள்முதலில் நலிவான கட்டுப்பாடு | செயற்திட்டக் கண்காணிப்புக் குழுவினால் சகல பீஜயூகளுக்கும் செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களின் பெறுவனவு, பதிவு மற்றும் விநியோகம் தெடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>குறைபாடுகளைச் சீராக்குவதற்கு ஓர் குறுகிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட நிதியத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக முறையான நடைமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | செயற்திட்டத்தின் படி, 2019 ஆம் ஆண்டின் போது 91 கொள்வனவு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு நான்கு பல்கலைக்கழகங்களினால் இலக்கிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ரூபா 474.44 மில்லியன் தொகையான மதிப்பீட்டுக் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது 33 நடவடிக்கைகளைச் செயற்திட்டம் பூர்த்தி செய்திருந்தது. | இது செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட முடிவுகளையும் விளைவையும் தாக்கும். | ஆரம்பிக்கப்பட இலக்கிடப்பட்ட 91 நடவடிக்கைகளில் 38 நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டின் போது பூர்த்தியடைந்திருந்தன. 2019 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட சில நடவடிக்கைகள் 2020 ஆம ஆண்டின் போதும் தொடர்கின்றன. 2020 இன் செயற்பாட்டு நடவடிக்கையுடன் கொள்வனவுகள் சீரமைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமங்களைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மேலதிகக் கிரயத்தைத் தவிர்ப்பதற்கு கொள்முதல் வேலைகளை பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்தல் |

| | பல்கலைக்கழகங்களின் பெயர் | பூர்த்தி செய்யப்படாத பணிகள் களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்படாத பணிகள்களின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| (அ) | களனி | 2 | 67,500,000 |
| (ஆ) | இரஜரட்ட | 10 | 81,771,840 |
| (இ) | சபரகமுவ | 5 | 102,133,800 |
| (ஈ) | ஜயவர்தனபுர | 16 | 223,016,400 |
| | **மொத்தம்** | **33** | **474,422,040** |